# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
## H.M.O.P.No. 181/2023

Deposition of PW 2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 12.06.2025.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | டாக்டர் ஸ்ரீநிதி | **Caste** | : | |
| **W/o** | **:** | நித்யானந்த் | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். நான் கோயமுத்தூரில் உள்ள கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் மனநல மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். பி.தீபா, த/பெ.பொன்னப்பன் என்பவர் எங்களது மருத்துவமனையில் என்னிடம் சிகிச்சை பெற்று வருகிறார். 24.11.2021 யில் இருந்து தற்சமயம் வரை தொடர்ச்சியாக என்னிடம் சிகிச்சை பெற்று வருகிறார். கடைசியாக 24.03.2025 யில் சிகிச்சைக்கு வந்துள்ளார். முதன்முதலாக 24.11.2021 யில் என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது அவருடைய வயது 24 ஆகும். அவருக்கு மனசிதைவு நோய் இருந்ததாக கண்டறியப்பட்டது. அவர் என்னிடம் சிகிச்சைக்கு வருவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக கூறினார். 2021 யில் என்னிடம் சிகிச்சைக்கு வந்த சமயத்தில் சுமார் 6 வருடங்களாக தனக்கு மேற்படி மனசிதைவு நோய்க்கான அறிகுறிகள் இருப்பதாக குறிப்பிட்டார். முதல்முறை மேற்படி நபரை அவருடைய அக்கா சிகிச்சைக்காக அழைத்து வந்தார். சிகிச்சைக்கு வரும் சமயத்தில் நோயாளியும் நோயாளியுடன் உடன் வந்த நபரும் எங்களிடம் பிரச்சினைகளை குறிப்பிடுவார்கள். மேற்படி நபரை அவரது அக்கா அல்லது அம்மா உடன் அழைத்து வருவார்கள். மேற்படி நபருக்கு என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் மருந்து மாத்திரைகள் கொடுத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. நோயாளியின் நிலைமைக்கு ஏற்றவாறு அவ்வப்போது மருந்து மாத்திரைகளை மாற்றி கொடுத்து தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்படி நபருக்கு 24.11.2021 முதல் 24.03.2025 வரை சிகிச்சை அளிக்கப்பட்டது குறித்ததான மருத்துவ கோப்பின் உண்மை நகல் தாக்கல் செய்யப்படுகிறது. அது **சா.த.சா.ஆ.1** கோர்வையாக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர்

SCHIZOPRENIA (மனசிதைவு) நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். தொடாந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி நோயின் அறிகுறிகள் என்னவாயிருக்கும் என்றால் இல்லாததை இருப்பதை போன்றதான உணர்வு, (delusion) காதில் யாரோ பேசிக்கொண்டே இருப்பது போல் கேட்பது (Hallucination) போன்ற அறிகுறிகள் இருக்கும். அவர் முதன்முதலாக என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது அவருக்கு திருமணமாகவில்லை. பின்னிட்டு தான் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்பாக அவர் திருமணம் செய்து கொள்ளலாமா என்பது குறித்து என்னிடம ஆலோசனை ஏதாவது கேட்டாரா என்றால் இல்லை. ஆனால் 10.03.2022 ந்தேதி என்னிடம் தொடர் சிகிச்சைக்காக வந்த சமயத்தில் 13.03.2022 ம் தேதி தனக்கு திருமணம் நடக்கபோவதாக சொன்னார். திருமணத்தை குறித்து தீபா சொன்னாரா அல்லது உடன் அழைத்து வந்தவர்கள் சொன்னாரா என்று எனக்கு குறிப்பாக நினைவில்லை. பின்னிட்டு 02.04.2022 ந்தேதி தொடர் சிகிச்சைக்கு வந்தார். அதுசமயம் திருமணம் ஆகிவிட்டதாகவும் எந்தவித தொந்தரவும் இல்லை என்றும் தீபாவும் அவரது அம்மாவும் கூறினார்கள். பின்னிட்டு 04.05.2022 யில் சிகிச்சைக்கு வந்துள்ளனர். அப்போது அவரும் அவரது அம்மாவும் என்னிடம் தன்னுடைய மனநிலை பிரச்சினை குறித்து கணவர் வீட்டிற்கு தெரிந்து விட்டதாகவும் திருமண பந்தத்தை ரத்து செய்து கொள்ளப்போவதாகவும் குறிப்பிட்டனர். மீண்டும் 11.07.2022 ந்தேதியில் என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது தனக்கு பிரச்சினைகள் எதுவும் இல்லை திருமண வாழ்க்கை சம்மந்தமாக எதுவும் என்னிடம் சொல்லவில்லை. 12.09.2022 யில் மேற்படி தீபாவின் கணவரும் அவரது குடும்பத்தாரும் என்னிடம் மனுதாரரையும் மனுதாரர் குடும்பத்தாரையும் அழைத்து வந்து மனுதாரருக்கு உரிய பிரச்சினைகள் குறித்து விசாரித்து அறிந்தனர். தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.3 கோர்வை மேற்படி தேதியில் எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவமனை பில் மற்றும் மருத்துவ பில்கள் கோர்வை என்றால் சரிதான். மேற்படி சமயத்தில் அந்த நபருக்கு கொடுக்கப்பட்ட மருந்துகள் அவருக்கு உண்டான SCHIZOPRENIA (மனசிதைவு) நோய்க்குண்டான மருந்துகள் என்றால் சரிதான். தற்சமயம் மேற்படி தீபாவிற்கு 27 வயதாகிறது. மேற்படி நபருக்கு புரிந்து கொள்ளும் தன்மை சற்று குறைவு. ஆனால் அவரை மனநலம் குன்றியவர் என்று கூற இயலாது. மேற்படி நபருக்கு திருமண வாழ்ககை தாம்பத்ய உறவு ஆகியவற்றை குறித்ததான புரிதலோ நாட்டமோ இல்லாத ஒரு மனநிலை இருந்ததாக எதிர்மனுதாரர் குறிப்பிடுகிறார் என்றால் அது குறித்து நான் அவரை பரிசோதனை செய்யவில்லை. கடந்த இரண்டரை வருடங்களாக அவருக்கு நோய்க்கான அறிகுறி சற்று குறைந்து வருகிறது. தொடாந்து ரெகுலராக அந்த பெண்ணிற்கு மேற்படி நோய்க்கான மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது. அவர் தொடர் சிகிச்சையில் தான் இருந்து வருகிறார்.

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

மேற்படி நபர் என்னிடம் வரும்போது நன்றாகதான் பேசுவார். என்னையும் உடன் இருக்கும் நபர்களையும் அவருக்கு நன்கு தெரியும். மேற்படி நபர் குளித்துவிட்டு திடீரென சரிவர ஆடைகளை உடுத்தாமல் வந்துவிட்டார் என்று மனுதாரர் கூறியுள்ளார். அவ்வாறான உணர்வற்ற தன்மை இருக்க கூடுமா என்றால் மேற்படி நோய் மிகவும் தீவிரமாகிவிட்டால் அவ்வாறு இருக்கலாம். ஆனால் மேற்படி கால கட்டத்தில் அவர் என்னிடம சிகிச்சைக்கு வந்த சமயத்தில் அவ்வாறு நடந்ததாக எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி தீபாவிற்கான மன சிதைவு தீவிரமாக இருந்ததாக என்னுடைய மருத்துவ ஆவணங்களில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர் தீவிர மனசிதைவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாரா என்றால் மேற்படி காலகட்டத்தில் என்னுடைய சிகிச்சைக்கு வந்தபோது அவ்வாறு அவர் தீவிர மனசிதைவு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி நபர் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் திருமண வாழ்க்கைக்கு தயாராக உள்ளாரா என்றால் உடல்ரீதியாக அவருக்கு எந்த தொந்தரவும் கிடையாது. தைராய்டு குறைபாட்டிற்கு மருந்து மாத்திரைகள் எடுத்துக்கொண்டுள்ளார். மனசிதைவு நோய்க்கான அறிகுறிகளும் குறைந்து கொண்டே வந்து தற்சமயம் மருந்து மாத்திரைகள் குறைக்கப்பட்டு விட்டன. மேற்படி நபர் மேற்படி சிகிச்சையில் இருப்பதாலேயே திருமண வாழ்க்கைக்கு தகுதியற்ற நபர் என்று குறிப்பிட முடியாது.

**மறுவிசாரணை**

10.03.2022 ந்தேதி மேற்படி நபர் சிகிச்சைக்கு வந்த சமயத்திலும், தொடர்ந்து 12.09.2022 ம் தேதி சிகிச்சைக்கு வந்த சமயத்திலும் அளிக்கப்பட்ட மருந்து மாததிரைகளின் வீரியம் தற்சமயம் இருப்பதை போல் இரண்டு மடங்கிற்கும் அதிகமாக வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

ஒம்/– ஸ்ரீநிதி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–A. சண்முகப்பிரியா,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.